சார்பு நீதிமன்றம் உத்தமபாளையம்

நாள்: 30.06.2026 SC. 89/2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சிவனேசன் | தொழில் | : | |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | | வயது | : | |
| விலாசம் | : | | | | |
| | | PW1 | | | |

---

முதல் விசாரணை

நான் கம்பம், நெல்லுக்குத்தி புளியமரத்தெருவில் குடியிருந்து வருகிறேன். வழக்கு பற்றி எதுவும் தெரியாது. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. என்னிடம் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடைய கையொப்பம் தான் அது அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் பிறழ்சாட்சியாக மாறி விட்டதால் நீதிமன்ற அனுமதியுடன் சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

குறுக்கு விசாரணை

கடந்த 13.11.2022ம் தேதி இரவு சுமார் 10 மணி போல் நானும், சஞ்சய் என்பவரும் கம்பம் புதுக்குளம் ரோட்டில் அரசு டாஸ்மாக் கடைக்கு மேற்கு உள்ள ரோட்டில் ஆலமரத்துககு பக்கததில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம். அப்போது எதிரி ஜெகனின் நண்பர்களான சந்தோஷ், ராம்ஜி, பிரபு அந்த இடத்திற்கு வந்தார்கள். நானும், அவர்களும் பேசி கொண்டிருந்தோம். அப்போது அநத் இடத்திற்கு ஜெகனும் வந்து அநாகரிகமான வார்த்தைகளால் பேசி உன் கடைக்கு வந்து தெருவில் நின்று பேசிக்கொண்டிருந்தபோது என்னை அந்த இடத்திற்கு வரகூடாது என்று 4 பேர் முன்னாடி என்னை அசிங்கப்படுத்திவிட்டாய், அந்த தெரு என்ன உன் அப்பன் வீட்டு இடமா என்று சொல்லிக்கொண்டு வீன் வம்பு செய்தார். நான் ஏன்டா இப்படி பேசுற பொம்பளை பிள்ளை இருக்கும்இடத்தில் அசிங்கமாக பேசாதே என்று நான் சொன்னேன் அதற்கு ஜெகன் என்னை அசிங்கப்படுத்தி விட்டாய் உன்ன உயிருடன் விடமாட்டேன் என்று இத்தோடு செத்து தொலைந்துபோடா என்று அவன் கையில் வைத்திருந்த கத்தியால் எனது இடது கை புஜம், இடது பக்க விலா ஆகிய இடங்களில் குத்தி கிழித்து இரத்த காயத்தை ஏற்படுத்தி

விட்டு சென்றுவிட்டான். நான் தடுமாறி கீழே விழுந்தபோது வலது பக்க தோள்பட்டையில் காயம் ஏற்ப்பட்டது.  அப்போது அந்த இடத்தில் இருந்த ராம்ஜி என்னை இருசக்கர வாகனத்தில் ஏற்றி கம்பம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று பின் மேல்சிகிச்சைக்காக க.விலக்கு மருத்துவமனையில் சேர்த்தார்கள் என்று போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்சமயம் எதிரிக்கு பயந்து பிறழ்சாட்சியாக மாறிவிட்டேன் என்றால் சரியல்ல.

M SHIVAJI CHELLIAH
Digitally signed by M SHIVAJI CHELLIAH

சார்பு நீதிபதி
உத்தமபாளையம்

சார்பு நீதிமன்றம் உத்தமபாளையம்

நாள்: 30.06.2026 SC. 89/2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராம்ஜி பிரபு | தொழில் | : | |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | | வயது | : | |
| விலாசம் | : | | | | |
| | | PW2 | | | |

---

முதல் விசாரணை

நான் கம்பம், A.M.சர்ச் தெருவில் குடியிருந்து வருகிறேன். வழக்கை பற்றி எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது.

**சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் பிறழ்சாட்சியாக மாறி விட்டதால் நீதிமன்ற அனுமதியுடன் சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

குறுக்கு விசாரணை

கடந்த 13.11.2022 ம் தேதி இரவு 9 மணியளவில் நானும், என் நண்பரான கம்பம் பட்டாளம்மன் கோவில் தெரு, அரசு மருத்துவமனை அருகல் குடியிருக்கும் சந்தோஷ் என்பவரும், கம்பம் புதுக்குளம் ரோட்டில் அரசு டாஸ்மாக் கடைக்கு மேற்கே உள்ள ஆலமரத்துக்கு பக்கத்தில் சென்று கொண்டிருந்தோம். அந்த இடத்தில் சிவனேசன் மற்றும் சஞ்சய் என்பவர்கள் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது நாங்களும் அவர்களுடன் சேர்ந்து பேசிக்கொண்டிருந்தோம். கொஞ்ச நேரத்தில் கம்பம் வடக்கு பட்டியில் குடியிருக்கும், எனது நண்பரான ஜெகனும், அந்த இடத்திற்கு வந்தார். அப்போது சிவனேசனை பார்த்து அநாகரிகமான வார்த்தைகளால் பேசி உன் கடைக்கு வந்து தெருவில் பேசிக்கொண்டிருந்த போது அந்த இடத்திற்கு வர கூடாது என 4 பேர் முன்னாடி என்னை அசிங்கப்படுத்திவிட்டாய் அந்த இடம் என உன் அப்பன் வீட்டு இடமா என்று சத்தம்போட்டு கொண்டே சிவனேசனிடம் ஜெகன் தகராறு செய்தார் , நானும், சந்தோசும் விலக்கிவிட்டோம். அப்போது ஜெகன் கையில் வைத்திருந்த கத்தியால் சிவனேசனை இடது கை புஜம், இடது பக்கவிலா, ஆகிய இடங்களில் குத்தி இரத்த காயங்களை ஏற்படுத்தி சென்றுவிட்டார். அப்போது இரவு 10 மணி இருக்கும் அப்போது நான் சிவனேசனை இருசக்கர வாகனத்தில் ஏற்றி கொண்டு கம்பம் அரசு மருத்துவமனனையில் சேர்த்தேன். அங்கு முதல்சிகிச்சை முடித்து க.விலக்கு

அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன் என்று போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்சமயம் எதிரிக்கு பயந்து பிறழ்சாட்சியாக மாறிவிட்டேன் என்றால் சரியல்ல.

M SHIVAJI CHELLIAH
Digitally signed by M SHIVAJI CHELLIAH

சார்பு நீதிபதி
உத்தமபாளையம்

சார்பு நீதிமன்றம் உத்தமபாளையம்

நாள்: 30.06.2026 SC. 89/2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சந்தோஷ் | தொழில் | : | |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | | வயது | : | |
| விலாசம் | : | | | | |
| | | PW3 | | | |

---

<u>முதல் விசாரணை</u>

நான் கம்பம், பட்டாளம்மன் கோவில் தெருவில் குடியிருந்து வருகிறேன். வழக்கை பற்றி எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது.

**<u>சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் பிறழ்சாட்சியாக மாறி விட்டதால் நீதிமன்ற அனுமதியுடன் சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.</u>**

<u>குறுக்கு விசாரணை</u>

கடந்த 13.11.2022 ம் தேதி இரவு 9 மணியளவில் நானும், என் நண்பரான கம்பம் A.M. சர்ச் தெரு, குடியிருக்கும் ராம்ஜி என்பவரும், கம்பம் புதுக்குளம் ரோட்டில் அரசு டாஸ்மாக் கடைக்கு மேற்கே உள்ள ஆலமரத்துக்கு பக்கத்தில் சென்று கொண்டிருந்தோம். அந்த இடத்தில் சிவனேசன் மற்றும் சஞ்சய் என்பவர்கள் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது நாங்களும் அவர்களுடன் சேர்ந்து பேசிக்கொண்டிருந்தோம். கொஞ்ச நேரத்தில் கம்பம் வடக்கு பட்டியில் குடியிருக்கும், எனது நண்பரான ஜெகனும், அந்த இடத்திற்கு வந்தார். அப்போது சிவனேசனை பார்த்து அநாகரிகமான வார்த்தைகளால் பேசி உன் கடைக்கு வந்து தெருவில் பேசிக்கொண்டிருந்த போது அந்த இடத்திற்கு வர கூடாது என 4 பேர் முன்னாடி என்னை அசிங்கப்படுத்திவிட்டாய் அந்த இடம் என உன் அப்பன் வீட்டு இடமா என்று சத்தம்போட்டு கொண்டே சிவனேசனிடம் ஜெகன் தகராறு செய்தார் , நானும், சந்தோசும் விலக்கிவிட்டோம். அப்போது ஜெகன் கையில் வைத்திருந்த கத்தியால் சிவனேசனை இடது கை புஜம், இடது பக்கவிலா, ஆகிய இடங்களில்

குத்தி இரத்த காயங்களை ஏற்படுத்தி சென்றுவிட்டார். அப்போது இரவு 10 மணி இருக்கும் அப்போது ராம்ஜி, சிவனேசனை இருசக்கர வாகனத்தில் ஏற்றி கொண்டு கம்பம் அரசு மருத்துவமனனையில் சேர்த்தார். அங்கு முதல்சிகிச்சை முடித்து க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்று போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்சமயம் எதிரிக்கு பயந்து பிறழ்சாட்சியாக மாறிவிட்டேன் என்றால் சரியல்ல.

M SHIVAJI CHELLIAH

Digitally signed by M SHIVAJI CHELLIAH

சார்பு நீதிபதி

உத்தமபாளையம்

சார்பு நீதிமன்றம் உத்தமபாளையம்

நாள்: 30.06.2026 SC. 89/2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சஞ்சய் | தொழில் | : | |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | | வயது | : | |
| விலாசம் | : | | | | |
| | | PW4 | | | |

---

முதல் விசாரணை

நான் கம்பம், முத்து சாமாண்டி பிள்ளை தெருவில் குடியிருந்து வருகிறேன். வழக்கை பற்றி எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது.

**சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் பிறழ்சாட்சியாக மாறி விட்டதால் நீதிமன்ற அனுமதியுடன் சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

குறுக்கு விசாரணை

கடந்த 13.11.2022 ம் தேதி இரவு10 மணியளவில் கம்பம் புதுக்குளம் ரோட்டில் அரசு டாஸ்மாக் கடைக்கு மேற்கே உள்ள ஆலமரத்துக்கு பக்கத்தில் நானும், சிவனேசனும் பேசிக் கொண்டிருந்தோம். அப்போது அங்கு வந்த ராம்ஜி, சந்தோஷ் அங்கு வந்து பேசிக்கொண்டிருந்தார்கள். கொஞ்ச நேரத்தில் கம்பம் வடக்கு பட்டியில் குடியிருக்கும், எனது நண்பரான ஜெகனும், அந்த இடத்திற்கு வந்தார். அப்போது சிவனேசனை பார்த்து அநாகரிகமான வார்த்தைகளால் பேசி உன் கடைக்கு வந்து தெருவில் பேசிக்கொண்டிருந்த போது அந்த இடத்திற்கு வர கூடாது என 4 பேர் முன்னாடி என்னை அசிங்கப்படுத்திவிட்டாய் அந்த இடம் என உன் அப்பன் வீட்டு இடமா என்று சத்தம்போட்டு கொண்டே சிவனேசனிடம் ஜெகன் தகராறு செய்தார், ராம்ஜியும், சந்தோசும் விலக்கிவிட்டார்கள். அப்போது ஜெகன் கையில் வைத்திருந்த கத்தியால் சிவனேசனை இடது கை புஜம், இடது பக்கவிலா, ஆகிய இடங்களில் குத்தி இரத்த காயங்களை ஏற்படுத்தி சென்றுவிட்டார். அப்போது இரவு 10 மணி இருக்கும் அப்போது ராம்ஜி சிவனேசனை இருசக்கர வாகனத்தில் ஏற்றி கொண்டு கம்பம் அரசு மருத்துவமனையில் சேர்த்தார். அங்கு முதல்சிகிச்சை முடித்து க.விலக்கு அரசு

மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்று போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்சமயம் எதிரிக்கு பயந்து பிறழ்சாட்சியாக மாறிவிட்டேன் என்றால் சரியல்ல.

M SHIVAJI CHELLIAH Digitally signed by M SHIVAJI CHELLIAH

சார்பு நீதிபதி
உத்தமபாளையம்